08.07.2025



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.49/2023**

**வா.சா. 1–தனம் என்கிற தனபாக்கியம், க/பெ.காளிதாஸ்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சா.ஆ.6 உயில் பத்திரத்தில் தாவா சொத்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் வாரிசாக யார் யார் காட்டப்பட்டுள்ளது என்றால் என்னையும், என் அக்காவையும் தான் காட்டப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் உள்ள விவரங்கள் மற்றும் தாக்கல் செய்த ஆவணங்கள் விவரங்கள் எனக்கு தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் செல்வராணியை கூட்டுப்பட்டாதாரராக காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு படிக்க தெரியாது, அவ்வாறு வா.சா.ஆ.4 ஆவணத்தில் செல்வராணியை கூட்டுப்பட்டாதாரராக சொல்லியுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி கூட்டுப்பட்டாதாரருக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல

08.07.2025



என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சங்கதியை பொறுத்து எனக்கு முழுமையாக தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/–திரு.T. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.